# 泰米尔语教程

中国传媒大学非通用语系列教材

精读第二册




பல்கலைக்கழகப்
பாட நூல்
தொகுதி 2

孙国强 编著

中国传媒大学出版社

中国传媒大学非通用语系列教材

# 泰米尔语教程



精读第二册

■ 孙国强　编著

中国传媒大学出版社

**图书在版编目（CIP）数据**

泰米尔语教程．精读．第 2 册／孙国强编著．—北京：中国传媒大学出版社，2008.12

ISBN 978-7-81127-282-6

Ⅰ．泰…　Ⅱ．孙…　Ⅲ．泰米尔语—高等学校—教材　Ⅳ．H622

中国版本图书馆 CIP 数据核字（2008）第 164913 号

**泰米尔语教程（精读第二册）**

**编　　著**：孙国强
**责任编辑**：欧丽娜
**责任印制**：曹　辉
**封面设计**：风得信设计·阿东
**出 版 人**：蔡　翔

**出版发行**：中国传媒大学出版社（原北京广播学院出版社）
**社　　址**：北京市朝阳区定福庄东街 1 号　邮编 100024
**电　　话**：86-10-65450532　65450528　传真：65779405
**网　　址**：http://www.cucp.com.cn
**经　　销**：新华书店总店北京发行所

**印　　刷**：北京市后沙峪印刷厂
**开　　本**：730×988mm　1/16
**印　　张**：16.5
**版　　次**：2009 年 1 月第 1 版　2009 年 1 月第 1 次印刷

**书　　号**：ISBN 978-7-81127-282-6/H·282　**定　价**：48.00 元

**版权所有　翻印必究　印装错误　负责调换**

# 前　言

《泰米尔语教程》（精读第二册）供大学二年级教学使用。本书内容丰富，语言语法规范。注重实用性，注重为学生打下扎实的语音语法基础。课文后面配有大量的语法注译，举例结合实际，因此，它对泰米尔语工作者有一定的参考价值。

本书能得以出版是与中国传媒大学外国语学院和中国传媒大学出版社的大力支持和帮助分不开的，在此深表感谢。

陈娟、江澂篱、韩崇、周欣、曲小艺、沈妙凤等同志分别参加校对和电脑录入工作，对她们的辛勤劳动在此一并谢过。

由于修改时间仓促，书中难免有疏漏不足之处，欢迎同行批评指正。

孙国强

2008年11月

# 目　　录


1. சிறு துளி பெரு வெள்ளம் ……………………………1
2. நீலமலைக் காட்சி ……………………………7
3. கல்வியின் சிறப்பு ……………………………15
4. பயிலுவோம் ……………………………20
5. செய்தித்தாள் ……………………………23
6. பழமொழிகள் ……………………………30
7. மருதுபாண்டியர் ……………………………33
8. உண்மை எது? போலி எது? ……………………………40
9. வரப்புயர…! ……………………………48
10. எனது பேராசிரியர் ……………………………54
11. நாட்டுப்பறவை மயில் ……………………………64
12. ஆணுக்குப் பெண் இளைப்பில்லை! ……………………………69
13. உழைப்பே உயர்வு ……………………………73
14. எங்கும் கூட்டம் எதிலும் கூட்டம் …………………………… 80
15. புதல்வரைக் காத்த புலவர் ……………………………87
16. அறிவே உயிர் காக்கும் ……………………………95
17. கப்பலோட்டிய தமிழன் ……………………………101




试读结束：需要全本请在线购买： www.ertongbook.com

18. ஒலிம்பிக் விளையாட்டு ......110
19. சமுதாய நண்பர்கள் ......118
20. வாழ்வாங்கு வாழ்ந்த பெரியார் ......127
21. சுற்றுப்புறத் தூய்மை ......135
22. சரிவிகித உணவு ......141
23. இயற்கை தரும் இன்பம் ......147
24. நீலச் சிற்றாடை ......153
25. கடிதம் – அப்பாவுக்கு ......162
26. கடிதம் – மகனுக்கு ......170
27. தாய்மொழியின் தனிச்சிறப்பு ......175
28. கவரி வீசிய காவலன் ......183
29. தந்தையன்பு ......190
30. பர்மியர் ......199
31. குழந்தை உள்ளம் ......210
32. எமது மொழி ......217
33. கல்வி சம்பந்தமான சுற்றுப்பயணம் ......225

# 1 சிறு துளி பெரு வெள்ளம்

கபிலன், வளவன் இருவரும் உடன்பிறந்தவர்கள். கபிலன மூத்தவன்;பதினோராம் வகுப்பில் படிக்கிறான்; விளையாட்டில் விருப்பமுள்ளவன்.

வளவன் எட்டாம் வகுப்பில் படிக்கும் சிறுவன்; சுறுசுறுப்பாக இருப்பான்;படிப்பில் ஆர்வமுள்ளவன்.


வளவன் படிக்கும் பள்ளியில் சிறு சேமிப்புத் திட்டம் ஒன்று இருந்தது. வளவன் அத்திட்டத்தில் சேர்ந்திருந்தான்.

வளவன் வீட்டுக்குச் செல்லப்பிள்ளை. அப்பா, அவனுக்குத் தின்பண்டம் வாங்க, நாள்தோறும் காசு தருவார். அந்தக் காசைச் செலவழிக்காமல் பள்ளிக்கு எடுத்துச் செல்வான். அங்குச் சேமிப்பு வில்லைகள் 25 காசு, 50 காசு, ஒரு ரூபாய் என இருக்கும். வளவன் தன்னிடம் உள்ள காசுக்குத் தகுந்த வில்லைகளை வாங்கிச் சேமிப்பு அட்டையில் ஒட்டி வருவான். ஐந்து ரூபாய்க்கு வில்லைகள் ஒட்டியவுடன் அதை அஞ்சலகத்தில் உள்ள சேமிப்புக் கணக்கில் வரவு வைத்து விடுவார்கள்.

ஒரு நாள், பள்ளித் தலைமை ஆசிரியர் வளவனை அழைத்தார். "வளவா! நீ இதுவரை சிறு சேமிப்பில் எவ்வளவு சேர்த்து வைத்துள்ளாய்?" என்று கேட்டார்.

வளவன் நூறு ரூபாய் வரை சேமித்து வைத்திருப்பதாகக் கூறினான். தலைமை ஆசிரியர் வளவனைத் தட்டிக் கொடுத்தார். " நம் பள்ளியில் இந்த ஆண்டு உனது சிறு சேமிப்புப் பணம் தான் அதிகம். அதற்காக உனக்கு நாளைக் காலை வழிபாட்டுக் கூட்டத்தின் போது, பரிசு தரப்போகின்றேன். உன் பெற்றோரை அழைத்து வா" என்றார்.

வளவனுக்கு அளவில்லா மகிழ்ச்சி. பள்ளி முடிந்ததும் வீட்டுக்குச் சென்றான். வீட்டில் அவன் தந்தை கவலையுடன் இருந்தார்.



“ஏன் அப்பா ஒரு மாதிரியாய் இருக்கிறீர்கள்? ” என்று கேட்டான் வளவன். அதற்கு அவன் தந்தை “ உன் அண்ணன் கபிலனுக்குத் தொழில் நுட்பப் பள்ளியில் படிக்க இடம் கிடைத்துள்ளது. அதற்குப் பணம் தேவை. கையில் பணம் இல்லை. என்ன செய்வது என்று நினைத்துக் கொண்டிருந்தேன்” என்றார்.

வளவன், “ எவ்வளவு ரூபாய் அப்பா தேவைப் படும்? ” என்று கேட்டான். தந்தை நிமிர்ந்து பார்த்து “ உனக்கேன் அதெல்லாம்? நீ போ” என்றார்.

“அப்பா, நீங்கள் எனக்குத் தின்பண்டம் வாங்குவதற்குக் காசு தருவீகளே! அந்தக் காசுகளையெல்லாம் பள்ளியில் உள்ள சிறு சேமிப்பில் சேமித்து வைத்தேன். என் சேமிப்பில் இப்பொழுது நூறு

ரூபாய் உள்ளது. அதனை எடுத்துக் கொள்ளலாம் அப்பா, அதற்காகக் கேட்டேன்.எங்கள் தலைமையாசிரியரும் உங்களை நாளை அழைத்துவரச் சொல்லியிருக்கிறார்" என்றான்.

"இருநூறு ரூபாய் தேவைக்கு ஒரு நூறாவது கிடைக்கிறதே! மகிழ்ச்சி" என்று அவனைத் தட்டிக் கொடுத்தார் அப்பா.

மறுநாள் காலை வளவன் பள்ளிக்குச் செல்லும் போது அவன் அப்பாவையும் அழைத்துச் சென்றான்.

பள்ளியில் காலை வழிபாடு தொடங்கியது.தமிழ்த்தாய் வாழ்த்தைப் பாடிய பிறகு, தலைமை ஆசிரியர் வளவனைப் பாராட்டி,ஓர் எழுதுகோலும் குறிப்பேடும் வழங்கினார். வளவன் தன் சேமிப்பில் உள்ள பணத்தைத் தருமாறு வேண்டினான். அவன் தந்தையிடம் நூறு ரூபாய் தரப்பட்டது.

சிறுவர் சிறுமியர்கள் அனைவரும் வளவனைப் போல் சிறு சேமிப்புத் திட்டத்தால் பயன் பெறலாம்.

சிறுசிறு மழைத்துளிகள் ஒன்றுசேர்ந்து பெரிய வெள்ளம் உருவாகிறது. சிறுசிறு மலர்களைச் சேர்த்தால் பூமாலையாகிறது.தேனீக்கள் சிறுசிறு தேன் துளிகளைத் திரட்டிப் பெரிய தேனடையை உருவாக்குகின்றன. சிறுவர் சிறுமியர் சிறுகச்சிறுகச் சேமித்து வந்தால் பெரும் தொகை ஆகும்;தேவைப்படும் பொழுது உதவும்.

"சேமிக்கப் பழகு;நாளும் சேமிக்கப் பழகு;
சிற்றெறும்பு தேனீ போலச் சேமிக்கப் பழகு."

**சொற்கள்**

| | | | |
|---|---|---|---|
| உடன்பிறந்தவர் | (名)同胞 | சேமித்துவை | (动)储存 |
| ஆர்வம் | (名)爱好；兴趣 | தட்டிக்கொடு | (动)激励；鼓励 |

| | | | |
|---|---|---|---|
| சேமிப்பு | (名)储蓄 | வழிபாடு | (名)崇拜 |
| திட்டம் | (名)计划 | அளவில்லா | (形)无比的 |
| சேர் | (动)加入；参加 | மாதிரி | (名)模型；样板 |
| செல்லப்பிள்ளை | (名)宠儿 | தொழில்நுட்பம் | (名)技术 |
| செலவழி | (动)花费；用钱 | தேவைப்படு | (动)需要 |
| வில்லை | (名)圆形筹码 | நிமிர்ந்து பார் | (动)抬头看；仰视 |
| எழுதுகோல் | (名)笔 | தேனடை | (名)蜂房 |
| அட்டை | (名)卡；卡片 | குறிப்பேடு | (名)笔记本 |
| ஒட்டு | (动)粘贴；粘住 | தொகை | (名)钱数 |
| அஞ்சலகம் | (名)邮局 | வெள்ளம் | (名)洪水；潮水 |
| சேமிப்புக்கணக்கு | (名)存款账户 | மழைத்துளி | (名)雨点 |
| வரவு வைத்துவிடு | (动)存入 | பூமாலை | (名)花环；花圈 |
| இதுவரை | (副)迄今为止 | | |
| பயன் | (名)有效；有益；有用 | | |
| தகுந்த | (形)合适的；适当的 | | |

## இலக்கணம்

1. “ஒரு மாதிரியாய் இரு”是习惯用法，表示“不高兴”“发愁”。

   ஏன் ஒரு மாதிரியாய் இருக்கிறாய்?

   你为什么不高兴？

2. …அழைத்துவரச் சொல் 或…வரச்சொல் 意为“叫某人来”。

   ஆசிரியர் உன்னை அழைத்துவரச் சொல்கிறார்.

   老师叫你去。

3. தருமாறு 关系分词将来时态后面加上 ஆறு 构成目的从句，表示“为了（in order to)”的意思，一般表示“请”、“恳请”、“呼吁”、“要求”的时候采用这种表达方法。

வளவன்,பணத்தைத் தருமாறு வேண்டினான்.

வளவன் 恳求把钱还给他。

நன்கு படிக்குமாறு ஆசிரியர் எங்களைக் கோரினார்.

老师要求我们好好学习。

வறிய விவசாயிகளுக்கு உதவிபுரியுமாறு உங்கள் அனைவரையும் நாம் கேட்டுக்கொள்கிறோம்.

我们请大家帮助贫苦农民。

ஈராக்கிலிருந்து வெளியேறுமாறு அமெரிக்கப் படைக்கு உலக மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

世界人民呼吁美军撤出伊拉克。

注：在这类目的从句中，ஆறு 可用 படி 代替，口语中一般用 படி。

என் வீட்டுக்கு விருந்தினராக வரும்படி உங்களை நான் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.

我恳请您来我家作客。

## பயிற்சி

1. அருஞ்சொற்பொருள் அறிக:

சிறுசேமிப்புத் திட்டம் – சிறிதுசிறிதாகக் காசு சேர்க்கும் திட்டம்.

உருவாக்குகின்றன – அமைக்கின்றன.

2. சொற்களைப் பிரித்து அறிக:

அளவில்லா – அளவு+இல்லா. அதெல்லாம் - அது+எல்லாம்.

தலைமையாசிரியர் – தலைமை +ஆசிரியர்.

தேனடை - தேன்+அடை.

பெருந்தொகை - பெரும்+தொகை.

3. （1）கீழ் உள்ள வினாக்களுக்கு ஒரு சொற்றொடரில் விடை எழுதுக.



试读结束：需要全本请在线购买： www.ertongbook.com


①வளவன் பள்ளியில் எந்தத் திட்டத்தில் சேர்ந்திருந்தான்?
②வளவன் எப்படி நூறு ரூபாய் சேர்த்தான்?
③வளவன் எவ்வளவு சேமித்து வைத்திருந்தான்?
④தலைமையாசிரியர் வளவனுக்குப் பரிசு வழங்கப் போவதாகக் கூறியதேன்?

(2) கீழ் உள்ள வினாக்களுக்குச் சுருக்கமான விடை எழுதுக.
①வளவன் தந்தைக்குப் பணம் தேவைப்பட்டதேன்?
②கவலைப்பட்ட தந்தைக்கு வளவன் கூறியதென்ன?
③சேமிக்க வேண்டுமென்பதற்கு எடுத்துக்காட்டுகளாகக் காட்டப் பெறுவன யாவை?

4. கோடிட்ட இடங்களைத் தகுந்த சொற்களால் நிரப்புக:
(1) வளவன் தன் கையிலுள்ள காசுக்கு ____________ வாங்கி ஒட்டுவான்.
(2) தலைமையாசிரியர் வளவனிடம், "நாளை நீ உன் ________ அழைத்து வா" என்றார்.
(3) தேனீக்கள் ____________ உருவாக்குகின்றன.
(4) சிறு சிறு மலர்களைச் சேர்த்து ____________ கட்டலாம்.

5. சொந்தமாகச் சொற்றொடர் அமைத்து எழுதுக:
சுறுசுறுப்பாக, நாள்தோறும், அளவில்லா, ஒரு மாதிரியாய், நிமிர்ந்து பார், தட்டிக்கொடு, அழைத்து வா, சேமித்து வை.

# 2 நீலமலைக் காட்சி



தமிழ்நாடு, இந்தியாவின் தென்பகுதியில் உள்ளது. இங்கு, மேற்குத் தொடர்ச்சி மலையும் கிழக்குத் தொடர்ச்சி மலையும் இணைகின்றன. அந்த இடமே நீலமலையாகும். அதை ‘ நீலகிரி ’ என்றும் கூறுகின்றோம்.

நீலமலையில் பவானி, மோயாறு என்னும் இரண்டு பெரிய ஆறுகளும், பல சிற்றாறுகளும் பாய்கின்றன. இது, தரை மட்டத்திலிருந்து 2000 மீட்டர் உயரத்தில் உள்ளது. எனவே, கோடைக்காலத்திலும் குளிர்ச்சியாக இருக்கும். கோடைக்கால வெப்பத்தைத் தாங்கிக் கொள்ள இயலாத மக்கள் பலர் அங்கு வந்து தங்குவார்கள். அதனால் அது சிறந்த மலைவாழ் இடமாக விளங்குகிறது. இந்தியாவில் உள்ள மலைவாழ இடங்கள் பலவற்றுள் நீலமலையே மிகச் சிறந்து விளங்குகிறது. ஆதலால் நீலமலையே ‘ மலைவாழ் இடங்களின் அரசி ’ எனப் புகழப் பெறுகிறது.

மலைச் சாரலில் தேயிலை, காப்பி, ஆரஞ்சு மற்றும் ரப்பர்த்-தோட்டங்கள் செழித்துக் காணப்படுகின்றன. மலைச்சாரலை ஒட்டிய காடுகளில் தேக்கு, சந்தனம், மூங்கில் முதலான மரங்கள் வானளாவி வளர்ந்து நிற்கின்றன.மேலும், தீக்குச்சி செய்யப் பயன்படும் மென் மரங்கள், நீலகிரித் தைலம் தரும் யூக்கலிப்டஸ், மற்றொரு மருந்து மரமான சின்கோனா முதலிய மரங்கள் மிகுதியாக உள்ளன.


தொதுவர், படகர், கோத்தர், குறும்பர், இருளர் முதலான பழங்குடி மக்கள் பலர் நீலமலையில் வாழ்ந்து வருகின்றனர். அவர்கள் உருளைக் கிழங்கு, முட்டைக்கோசு போன்ற காய்கறிகள் பயிரிடுதல், பழத்தோட்டங்கள் அமைத்தல் முதலான தொழில்களில் ஈடுபட்டு வருகின்றனர். நீல மலையிலிருந்து கிடைக்கும் காய்கறிகளும், பழங்களும் மிகவும் சுவையானவை.

நீலமலையில் உதகமண்டலம், குன்னூர், கோத்தகிரி, கூடலூர் முதலிய ஊர்கள் உள்ளன. அவற்றுள் உதகமண்டலமே மிகவும் அழகான ஊராகும். அதை உதகை, ஊட்டி என்றும் குறிப்பிடுவார்கள். உதக மண்டலமே நீலகிரி மாவட்டத்தின் தலைநகரமாகும். அது தரை மட்டத்திலிருந்து 2300மீட்டர் உயரத்தில் இருக்கிறது. அங்குத்தான் தமிழ்நாட்டிலேயே மிக உயரமான மலை முடியாகிய ‘ தொட்டபெட்டா ’ உள்ளது.

உதகைக்குச் செல்லப் பேருந்து வழிப்பாதை உள்ளது; தொடர்வண்டி வழிப்பாதையும் உள்ளது. தொடர்வண்டி வழிப்பாதை, பாறைகளைச் செதுக்கியும் மலைகளைக் குடைந்தும் அமைக்கப் பெற்றுள்ளது. அப்பாதை வளைந்து வளைந்து மலைமீது ஏறிச் செல்கிறது. அப்பாதையில் தொடர் வண்டி மூலம் செல்வதே மிகவும் இனிமையான பயணமாகும்.

பாதை நெடுகிலும் மலைகளும், பள்ளத்தாக்குகளும் மாறிமாறித்

தோன்றும். தவழ்ந்து செல்லும் மேகங்கள், மலையிலிருந்து விழும் அருவிகள், மரங்கள் நிறைந்த காடுகள், பச்சை பசேல் என விளங்கும் தோட்டங்கள், அடர்த்தியான செடி கொடிகள் ஆகியவை கண்கொள்ளாக் காட்சியாகும்.



உதகையில் அழகான ஏரி ஒன்று உள்ளது. அந்த ஏரியில், படகில் ஏறி உலா வருவது மகிழ்ச்சியான பொழுதுபோக்காகும். அவ்வாறு படகுப் பயணம் செய்யும் பொழுது பசுமையான விளையாட்டு அரங்கத்தையும் அழகிய பூங்காக்களையும் கண்டு மகிழலாம். அங்கு வரும் பயணிகள் படகில் செல்லும் காட்சி திருவிழாப் போல இருக்கும்.

பலவகை வண்ண மலர்கள், பல்வேறு தாவரங்கள் நிறைந்த

சிறப்பு மிகுந்த பெரிய பூங்கா ஒன்று உதகையில் உள்ளது. அதற்குத் ' தாவரவியல் தோட்டம் ' என்று பெயர். அங்கு ஆண்டுதோறும் கோடைக் காலத்தில் மலர்க்கண்காட்சி நடைபெறும். அக்காலத்தில் நீலமலை மேலும் இனிமையாக விளங்கும்.

"இயற்கை இன்பக் காட்சி
எழில் அரசி மாட்சி"

சொற்கள்

| | | | |
|---|---|---|---|
| தொடர்ச்சிமலை | (名)山脉 | தீக்குச்சி | (名)火柴 |
| கண்காட்சி | (名)展览 | மென் | (形)软的 |
| இணை | (动)连接 | தைலம் | (名)香精油；清凉油 |
| ஆறு | (名)河 | மிகுதியாக | (副)很多地 |
| பாய் | (动)流动(河水) | பழங்குடி | (名)部落 |
| தரைமட்டம் | (名)地平面 | முட்டைக்கோசு | (名)洋白菜 |
| கோடைக்காலம் | (名)夏季 | பயிரிடு | (动)种植 |
| குளிர்ச்சி | (名)冷；凉爽 | ஈடுபடு | (动)从事 |
| வெப்பம் | (名)热 | குறிப்பிடு | (动)指出 |
| தாங்கு | (动)忍耐；承受 | மாவட்டம் | (名)县 |
| மலைவாழ் இடம் | (名)山区 | மலைமுடி | (名)山峰 |
| அரசி | (名)皇后 | மலைச்சிகரம் | (名)山峰 |
| புகழ் | (动)赞扬 | பாறை | (名)岩石 |
| மலைச்சாரல் | (名)山坡 | செதுக்கு | (动)雕刻 |
| காப்பி | (名)咖啡 | குடை | (动)挖(山) |
| ஆரஞ்சு | (名)桔子 | வானளாவு | (动)参天；高耸 |
| ரப்பர் | (名)橡胶 | நெடுகிலும் | (副)沿着 |

| | | | |
|---|---|---|---|
| தேக்கு | (名)柚木树 | தவழ் | (动)爬行 |
| சந்தனம் | (名)檀香木 | அருவி | (名)瀑布 |
| வழிப்பாதை | (名)路；道路 | பசுமையான | (形)绿色的 |
| …ஐ ஒட்டிய | (形)紧挨…的；接壤 | | |

| | |
|---|---|
| கண் கொள்ளாக் காட்சி | (名)奇妙的景色 |
| விளையாட்டு அரங்கம் | (名)运动场 |
| இனிமையான | (形)甜蜜的；动听的；愉快的 |
| அடர்த்தியான | (形)茂密的；稠密的 |

## இலக்கணம்

1. தொடர்ச்சி மலை

தொடர்ச்சி மலை=மலைத்தொடர் "山脉"之意，后者范围用得更广。

2. தரை மட்டத்திலிருந்து 和 கடல் மட்டத்திலிருந்து

இக்கோபுரம் தரை மட்டத்திலிருந்து 1000 மீட்டர் உயரத்தில் உள்ளது.

这座塔离地面一千米高。

இந்நகரம்,கடல் மட்டத்திலிருது 500 மீட்டர் உயரத்தில் உள்ளது.

这个城市位于海拔五百米的高处。

3. மலை முடி

மலை முடி = மலைச்சிகரம் "山峰"的意思

4. நெடுகிலும்

யாங்சி ஆறு நெடுகிலும் 沿着长江

பெய்ஜிங்- சாங்காய் இருப்புப்பாதை நெடுகிலும் 沿着京沪铁路

5. மாறி மாறி "轮流"、"交替"的意思

நாம் மாறி மாறி விடுமுறையைக் கழிக்கிறோம்.

我们轮流度假。



试读结束：需要全本请在线购买： www.ertongbook.com